செய்தி குறிப்பு எண்.170 நாள் 21.11.2006

# முல்லைப் பெரியாறு பிரச்சினையில் ஜெயலலிதாவின் ஆத்திர அறிக்கைக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆதாரப் பூர்வமான விளக்கம் – 21.11.2006

இன்றைக்கு அறிக்கை விடுவதற்கு என்ன கிடைக்கும், எது கிடைக்கும் என்று அலையாய் அலைந்து; அந்தத் தேடலில் கிடைத்த பொருளாக எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா முல்லைப் பெரியாறு பற்றி இன்று அறிக்கை எழுதி; முழு அறிக்கையையும் என்னையும், மத்திய அரசையும் அவதூறு கூறி தாக்குவதற்கே பயன்படுத்தியிருக்கிறார்.

போகிற போக்கில் இங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளையும் ஒரு தட்டு தட்டிப் பார்த்துள்ளார்.

காவிரிப் பிரச்சினையிலாகட்டும்; முல்லைப் பெரியாறு பிரச்சினை யிலாகட்டும் தமிழ்நாட்டு விவசாயிகளின் உயிர்ப் பிரச்சினையாகக் கருதி இங்குள்ள அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் நிற்க வேண்டுமென்பதற் காகத் தான் 23.10.2006 அன்று சென்னையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தி, அக்கூட்டத்தில் விரிவாக விவாதம் நடத்தி, இறுதியாக உச்ச நீதி மன்றம் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் நல்லெண்ண சமிக்ஞையாக மத்திய அரசு முன்னிலையில் தமிழக அரசு கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும், அதிலே உரிய பலன் கிடைக்காத பட்சத்தில் மீண்டும் உடனடியாக உச்ச நீதி மன்றத்தையே அணுகி, உச்ச நீதி மன்றம் 27.2.2006 அன்று பிறப்பித்த உத்தரவான அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்திக் கொள்ளலாம் என்று அனுமதி பெறலாம் என்றும்

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கூட்டத்தில் அ.தி.மு.க. சார்பில் இரண்டு பேர் கலந்து கொண்டு தங்கள் கருத்தைத் தெரிவித்ததோடு, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்போ, வெளி நடப்போ செய்யவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. ஆனால் அதற்குப் பிறகு பல நாட்கள் காத்திருந்து விட்டு, இப்போது திடீரென்று விழித்துக் கொண்டு ஜெயலலிதா அறிக்கை என்ற பெயரால் வசைமாரி பொழிந்திருப்பது என்ன நியாயம் ?

மேலும் ஜெயலலிதா தனது அறிக்கையில் உச்ச நீதி மன்றத் தீர்ப்பில் உறுதிகாட்டுவதில் ஏன் அக்கறை காட்டவில்லை என்று கடுமையாகக் கேட்டுள்ளார். 142 அடியாக நீர் மட்டத்தை உயர்த்துவது பற்றி உச்ச நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்தது 27.2.2006. அப்போது ஆட்சியில் இருந்தது இதே ஜெயலலிதா தான். தீர்ப்பு வந்த பிறகு; அதற்கு அடுத்த மாதம் கேரள அரசு 15.3.2006இல் உச்ச நீதி மன்றத் தீர்ப்புக்கு மாறாக சட்டப் பேரவையில் ஒரு திருத்தச் சட்டமே கொண்டு வந்து நிறைவேற்றியது. அப்போது தமிழகத் தில் ஆட்சியிலே இருந்ததும் இதே ஜெயலலிதா தான். அதற்குப் பிறகு இரண்டு மாதங்கள் கழித்துத் தான் தேர்தல் நடைபெற்று தி.மு.கழக ஆட்சி ஏற்பட்டது. எனவே உச்ச நீதி மன்றத் தீர்ப்புக்குப் பிறகும், கேரள அரசு சட்டத் திருத்தம் நிறைவேற்றிய பிறகும் ஆட்சியில் இரண்டு மாதங்கள் இருந்த இந்த ஜெயலலிதா எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததற்கு என்ன காரணம் ? அப்போது அவர் ஏன் அசட்டையாக இருந்தார் ? தமிழக விவசாயிகளின் பிரச்சினை ஜெயலலிதா விற்கு அப்போது முக்கியமாகத் தெரியவில்லையா ? என்றெல்லாம் நாமும் கேட்கலாம் அல்லவா ?

அப்போதெல்லாம் சும்மா யிருந்து விட்டு, தற்போது ஏதாவது இந்த ஆட்சியைப் பற்றி குறை சொல்ல வேண்டுமென்று அறிக்கை விடுவதற்குப் பெயர் விதண்டா வாதம் தானே ? இது போல ஒவ்வொரு பிரச்சினையிலும் ஜெயலலிதா குறுக்கு சால் ஒட்டி அரசியல் ஆதாயம் தேட முற்படுவது என்பது

தமிழக மக்கள் அனைவரும் உணர்ந்த ஒன்று தான். இரு மாநில மக்களின் பாதுகாப்பிலும், தமிழக விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதிலும், தமிழக மக்களின் உரிமைகளை விட்டு விடக் கூடாது என்பதிலும், அதே நேரத்தில் உச்ச நீதி மன்றத்தின் கருத்துக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்பதிலும் தி.மு.க. கூட்டணி அரசு கவனமாக இருக்கின்றது. இந்த நிலையில் ஜெயலலிதா தனது அறிக்கையின் மூலமாக மத்திய அரசையும், மாநில அரசையும் ஏன் அனைத்துத் தரப்பினரையும் கூட்டணி கட்சியினரையும் அநாகரீக வார்த்தைகளால் சாடுவதன் காரணம், ஆட்சியை இழந்து விட்டு நிற்கும் வேதனை தான் என்பது நமக்குப் புரியத் தான் செய்கின்றது. இருந்தாலும் என்ன செய்வது ? பரிதாபப்படத் தான் முடியும் ! இனிமேலாவது அவர் எல்லாவற்றையும் எதிர்ப்பது என்ற போக்கை மூட்டை கட்டி வைத்து விட்டு, அ.தி.மு.க. வும் கலந்து கொண்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***

வெளியீடு:– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9